**அரசகரும மொழிகள் திணைக்களம்**

**ஒரு அரசகரும மொழிக்கு மேலதிகமாக தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறும் அரச உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை தோற்ற வேண்டிய பரீட்சை - 2020**

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் 2007.02.09 ஆம் திகதி வெளியிடப்பட்ட 03/2007 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒரு அரசகரும மொழிக்கு மேலதிகமாக தேர்ச்சியை பெற்றுக் கொள்ளும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒரு முறை மாத்திரம் வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியமற்ற சம்பளவேற்றத்திற்கு இணையான மாதாந்த கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

02. அச் சிறப்புரிமையை பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

03. அதன் பிரகாரம் மேற்குறித்த சிறப்புரிமையை பெற்றுக் கொண்ட அல்லது தற்போது பெறும் உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சிக்கான பரீட்சையை 2020 டிசம்பர் மாதம் இத் திணைக்களத்தில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சையானது செவிமடுத்தல் மற்றும் வாய்மொழிப் பரீட்சையாகும்.

04. அதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

05. அதற்குரிய மாதிரி விண்ணப்பப் படிவம் இங்கு காட்டப்பட்டுள்ளதோடு, அதனை இத் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk எனும் இணையத்தள முகவரியினூடாக பெற்றுக் கொள்ள முடியும் அல்லது A4 அளவிலான தாளில் இலக்கம் 1 முதல் 9 வரை முதல் பக்கத்திலும், மிகுதி பகுதியை இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தனித் தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் உள்ள விபரங்களைத் தனது கையெழுத்திலேயே பூரணப்படுத்தல் வேண்டும், அத்தோடு நிறுவனத் தலைவரின் சான்றுரை மற்றும் பதவி முத்திரையுடன் 2020.11.13ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு **அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம், அரசகரும மொழிகள் திணைக்களம், இல.341/7, கோட்டே வீதி, ராஜகிரிய.** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறும் அரச உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை தோற்ற வேண்டிய பரீட்சை -2020”** எனக் குறிப்பிடல் வேண்டும்.

06. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமொன்றை செலுத்துதல் வேண்டும். கட்டணத்தை செலுத்த வேண்டிய முறை பின்வருமாறு.

- Iஆம் மட்டம் - ரூ. 1000.00
- IIஆம் மட்டம் - ரூ. 700.00
- IIIஆம் மட்டம் - ரூ. 500.00

பரீட்சைக்கட்டணம் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் அமைந்துள்ள இலங்கை வங்கிக்கிளையில் "இராஜகிரிய, இலங்கை வங்கியில் உள்ள அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தின் 7041541 எனும் இலக்கம் கொண்ட கணக்கிற்கு" வைப்பிலிட வேண்டியதோடு அப்படிவத்தில் வைப்பாளரின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடவேண்டிய இடத்தில் விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரிக்கு மேலதிகமாக தேசிய அடையாள அட்டை இலக்கத்துடன் Exam எனக் குறிப்பிட்டு, பணம் செலுத்தியதன் பின்னர் வங்கியினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டில் கணனியினால் அச்சிடப்பட்ட இலக்கம் (நான்கு பகுதிகளைக் கொண்ட) மற்றும் திகதியை விண்ணப்பப் படிவத்தின் உரிய கூட்டில் குறிப்பிட்டு அப்பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (அப் பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்)

07. மொழிக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்காகத் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மொழித்தேர்ச்சி பெறுபேற்று ஆவணப் பிரதியை நிறுவனத் தலைவர் ஊடாக அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தயோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தி விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேணடும்.

08. மேற்குறித்த ஆலோசனைகளுக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படாத அல்லது பூரணமாக்கப்படாத அல்லது பணம் செலுத்திய பற்றுச் சீட்டை சமர்ப்பித்திராத அல்லது இறுதி திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

09. இப் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்கள் குறித்தும்அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். பரீட்சைக்காக வழங்கப்படும் திகதி, நேரம் அல்லது பரீட்சை நிலையம் என்பன எந்தவொரு காரணத்திற்காகவும் மாற்றஞ் செய்யப்பட மாட்டாது. அத்தோடு பெறுபேறும் மீளாய்வு செய்யப்பட மாட்டாது.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரமாகும் இவ் அறிவித்தலின் மொழிகளுக்கிடையில் இணக்கப்பாடு அல்லது வேறுபாடுதென்பட்டால்;அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரின்ஸ் சேனாதீர<br>
அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம்<br>
அரசகரும மொழிகள் திணைக்களம்<br>
இல.341/7,கோட்டே வீதி,<br>
இராஜகிரிய.<br>
2020.08.14

## அரசகரும மொழிகள் திணைக்களம்

**ஒரு அரசகரும மொழிக்கு மேலதிகமாக தேர்ச்சியை பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளும் அரச உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை தோற்ற வேண்டிய பரீட்சை - 2020**

**விண்ணப்பப் படிவம்**

| அலுவலக உபயோகத்திற்கு |
|---|

மாவட்டம் [ ]

(சேவை நிலையம் உள்ளடங்கும் மாவட்டத்தைக் குறிப்பிடுக)

| ஊக்குவிப்புக் கொடுப்பனவை பெறும் மொழி மற்றும் மட்டத்தை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். பின்னர் மாற்றஞ் செய்வதற்கு |
|---|

ஊக்குவிப்புக் கொடுப்பனவை பெறும் மொழி | மட்டம்

சிங்களம் -2<br>
தமிழ் -3 [ ]

மட்டம் I - 1<br>
மட்டம் II - 2<br>
மட்டம் III -3 [ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

1. முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு விண்ணப்பதாரியின் பெயர்: (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்) உ-ம் : RANATHUNGA, M.A.G.

   ................................................................................................................................

2. விண்ணப்பதாரியின்முழுப்பெயர்: (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்) உ-ம் : MUTHUKUDA ARACHCHIGE GAMINI RANATHUNGA.

   ................................................................................................................................

   ................................................................................................................................

3. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்)
   (உ-ம் : முத்துகுட ஆரச்சிகே காமினிரணதுங்க)

   ................................................................................................

   ................................................................................................

4. அலுவலக முகவரி : (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்) (அனுமதி அட்டை இம் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்) ................................................................................................

   ................................................................................................

5. தேசிய அடையாள அட்டை இலக்கம்: [ | | | | | | | | - | | | ]

6. தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]

7. உங்களது சேவை உள்ளடங்குவது : (அரச சேவை /மாகாண அரச சேவை) ................................................................................

8. மொழி ஊக்குவிப்புக் கொடுப்பனவை பெறும் பதவி: ..............................................

9. மொழி ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கான தகைமை பெற்ற திகதி: ..............................................................................

10. I) அரசகரும மொழிப் பரீட்சை செல்லுபடியாகும் திகதி (பெறுபேற்றுக் குறிப்பில் காணப்படுமாறு): ....................................................................

ii) பரீட்சை சுட்டெண் : ....................................................

**(பெறுபேற்று சான்றிதழின் பிரதியை நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தி இணைத்தல் வேண்டும்.)**

11. பரீட்சைக் கட்டணம் : ரூ. .............................. செலுத்திய அலுவலகம் : ..............................

பற்றுச் சீட்டு இலக்கம் : ......................................

| பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும் |
| --- |
| |

மேற்குறித்த விபரங்கள் சரியானவை எனவும், பரீட்சை குறித்த எந்தவொரு விடயம் தொடர்பிலும், அரசகரும மொழிகள் ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானத்தை இறுதி தீர்மானமாக ஏற்றுக் கொள்கிறேன் எனவும், பரீட்சை சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுகிறேன் எனவும், இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் அனைத்து நிபந்தனைகளையும் வாசித்து புரிந்து கொண்டேன் எனவும் நான் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

..............................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்
(நிறுவனத் தலைவரின் முன்னிலையில்)

திகதி : ..................................................

---

## நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தல்

மேற்குறித்த விண்ணப்பதாரி எனது நிறுவனத்தில் சேவையாற்றுகிறார் என்பதையும், விண்ணப்பப் படிவத்தில் 1 முதல் 11 வரை குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதையும், அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் மொழியில் அலுவலக நடவடிக்கைகளில் (கடிதம் எழுதுதல்/ மொழிபெயர்ப்பு/ உரைபெயர்ப்பு/ பொது மக்கள் தொடர்பாடல் நடவடிக்கைகள் முதலியன) குறித்த உத்தியோகத்தர் செயற்திறனான பங்களிப்பை வழங்குகிறார் என்பதையும், அவர் ...................................ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் சான்றுப்படுத்துகிறேன்.

கையொப்பம் : ..............................................................

பெயர் :..............................................................

பதவி :..............................................................

பதவி முத்திரை